விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆவணி 18 ஜுலை 14 இதழ் 202

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3—9—82

## அரசியல் நடவடிக்கைகளுக்கு திருமதி சிறிமாவோ 'தற்காலிக' முழுக்கு?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது அரசியல் நடவடிக்கைகளை ஒத்திவைத்துள்ளாரா?

நேற்று வெளியான 'தினகர' (சிங்களத் தினசரி) பத்திரிகையில் வெளியான செய்தியின்படி, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியல் நடவடிக்கைகளை தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளார் என்றும், ஜனுதிபதித் தேர்தல் நடைபெறும்வரை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் கலந்துகொள்ளமாட்டார் என்றும் தெரியவருகிறது.

சட்டத்தரணிகளின் ஆலோசனைகளின் மீதே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்படி முடிவை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ஜனுதிபதி தேர்தல்: பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

ஜனுதிபதி தேர்தலை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

(6-ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உயர்தரம்) பௌதிக பரீட்சை ரத்து!

(கொழும்பு)

கடந்த மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர் தர) பரீட்சையின் பௌதிகப் பாடப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ம் திகதி நடைபெற்ற இப்பரீட்சை ரத்துச் செய்யப் பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு குணபால விக்கிரமரட்ன தெரிவித்தார்.

ஆயுதங்கள் சகிதம் சென்றவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இரு பரீட்சை நிலையங்களுக்குச் சென்று பௌதீகப் பாடப் பரீட்சை விடைத்தாள்களை அபகரித்ததையடுத்தே இப்பரீட்சை ரத்துச்செய்யப்படுவதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பௌதீகம் I, II ஆகியவற்றுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 9ம்திகதி சகல பரீட்சை நிலையங்களிலும் நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார். [ம-வெ]

# பயங்கரவாதம்: வட பகுதி மக்கள் வெறுக்கிருர்கள்!

## "வாக்குப் பலத்தினுலேயே ஆட்சியை கைப்பற்றமுடியும்"

### கிழக்குப் பிராந்திய டி. ஐ. ஜி. கூறுகிருர்

(நமது நிருபர் இரா. உதயகுமார்)

'வடபகுதி மக்கள் பயங்காரவாதத்தை வெறுக்கிருர்கள். பயங்கரவாதிகளுக்கு அவர்கள் ஆதரவளிப்பதில்லை. பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுமாறு அவர்கள் பொலிசாரைக் கோரியுள்ளனர். பயங்கரவாதத்தை, பயங்கரவாதத்தினுல் தடுக்கமுடியாது.'

இவ்வாறு கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபராகப் பதவி ஏற்ற திரு. பி. மகேந்திரன் கூறினுர்.

புதிய பதவியை ஏற்றுக்கொண்ட திரு. மகேந்திரன் தமது அலுவலகத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினுர். இம்மாநாட்டிலேயே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. மகேந்திரன், கடைசியாக வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபராகக் கடமையாற்றிய பின்னர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, நேற்றுமுன்தினம் கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபராகப் பதவியேற்றுக்கொண்டார்

அவர் மேலும் கூறியதாவது:-

'வடபகுதி பயங்கரவாதிகள் இதுவரை சாதித்தது என்ன? தமிழ்ப் பொலிசாரைச் சுட்டுக்கொலைசெய்துவிட்டு அவர்களது குடும்பத்தினரை அவலநிலைக்குள்ளாக்கியதே அவர்கள் செய்தவேலையாகும்.

#### ரேகணவினுல் முடிந்ததா?

'1971-ம் ஆண்டு பயங்கரவாத நடவடிக்கைமூலம் ஆட்சியைக் கைப்பற்ற முயன்று படுதோல்வி அடைந்தார் எவருமே பயங்கரவாதத்தால் ஆட்சியைக் கைப்பற்றமுடியாது. வாக்குப்பலத்தினுல் மட்டுமே ஆட்சியைக் கைப்பற்றமுடியும்.

#### இளைஞர்களின் ஆசை நிறைவேருததினுல்...

'இளைஞர்கள் தமது எண்ணங்களும் ஆசைகளும் நிறைவேருததினுல் தமது ஆசைகளுக்கும் எண்ணங்களுக்கும் தடையாக இருப்பவர்களை அழிக்க முற்படுகிருர்கள். இதனுல் எவருக்கு என்ன பயன்?

#### சமாதானக்குழுக்கள்

'கிழக்குப் பிராந்தியத்தில் அமைதியும் சமாதானமும் நிலவவும், மக்கள் பாதுகாப்புடன் வாழ்வதை உறுதிசெய்யவும் சமாதானக் குழுக்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட உள்ளன. அந்தந்தப் பகுதிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் தலைமையில் இயங்க இருக்கும் இச் சமாதான குழுக்களில் மக்களால் தெரிவுசெய்யப்படுபவர்கள் அங்கத்தவர்களாக இருப்பர்.

'இந்தச் சமாதானக் குழுக்களை ஜனுதிபதி தேர்தலுக்கு முன்னரே அமைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளேன். (இ)

## துப்பாக்கி சூட்டுக்கு இளைஞர் பலி!

### கோண்டாவில் சந்திக்கருகில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது படக்காட்சி பார்த்து விட்டு காரில் சென்றவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானுர்!

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த எஸ், சிவசம்பு (22 வயது) எனும் இளைஞரே துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவராவார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே காரில் பிரயாணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கோண்டாவில் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இப்பயங்கர சம்பவம் நிகழ்ந்துள்ளது,

யாழ். நகரிலுள்ள தியேட்டர் ஒன்றில் 2வது காட்சி பார்த்துவிட்டு ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 3 ஆண்களும், 3 பெண்களும் பலாலி வீதி

[6ம் பக்கம் பார்க்க]

## இந்திய அமைச்சரவையில் திடீர் மாற்றம்!

புதுடில்லி, செப் 2

இந்திய மத்திய அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

திரு. பி. சி. சேத்தி உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் திரு. ஷெல்பி செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் பதவியை ஏற்றுள்

[6ம் பக்கம் பார்க்க]

## இந்தியா முழுவதும் இன்று பத்திரிகையாளர் வேலைநிறுத்தம்

புதுடில்லி, செப். 2

பீஹார் மாநிலத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த கொண்டுவரப்படவுள்ள சட்டத்தை எதிர்த்து இந்தியாவிலுள்ள சகல பத்திரிகையாளர்களும் நாளை வெள்ளிக்கிழமை 24 மணிநேர வேலைநிறுத்தத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இந்தியாவில் பத்திரிகைச்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட பீடி இலை மூடைகள் கைப்பற்றப்பட்டன!

### கொக்குவில் பகுதியில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாகக் கருதப்படும் 87,960 ரூபா பெறுமதியான பீடிஇலை மூடைகள் யாழ் சுங்க இலாகாவினுல் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொக்குவில் பகுதியிலுள்ள ஒரு அரிசி ஆலையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட சுங்க இலாகா உதவி கலெக்டர் திரு. எஸ். எம். ஜே. செனரத்னவுக்கு நேற்று முன்தினம் கிடைத்த இரகசிய தகவலொன்றின்பேரில் அங்கு சென்ற சுங்க இலாகா உத்தியோகத்தர்கள், பீடிஇலை மூடைகளைக் கைப்பற்றியதுடன் உரிமையாளர் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரில் ஒருவருக்கு பத்தாயிரம் ரூபாவும், மற்றவருக்கு இரண்டாயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டதுடன், பீடி இலைமூடைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. [மா]

### சர்வோதய சீட்டிழுப்பு முடிவுகள்

வடமாகாண சர்வோதய சிரமதானச் சங்கத்தினரால் தொல்புரம் கிராமோதய நிலையத்தில் 01-09-1982 அன்று மாலை 7-00 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட மூன்ருவது மலகூட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு;

1-ம் பரிசு C — 20350
(கொன்சல் கார் EN 3882)

2-ம் பரிசு C — 11913
(மலகூடம் கட்டிக் கொடுத்தல்)

3-ம் பரிசு C — 06077
(ஆண்கள் துவிச்சக்கரவண்டி "ஏசியா")

4-ம் பரிசு C — 23934
(சிறுவர் துவிச்சக்கரவண்டி "பிளெங் பிஜன்")

(4412)

# வரி விளம்பரம்

## வகுப்பு

1982 டிசம்பர் பரீட்சைக்குரிய 3 மாத மீட்டல் வகுப்பு 15-9-82 ஆரம்பமாகவுள்ளது. பழைய வினாத்தாள்களும், மாதிரி வினாத்தாள்களும் இலவசமாக மீட்டல் செய்யப்படும். மற்றும் 6, 7, 8, 9ம் வகுப்புக்களுக்கு கணித, விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தனிப்பட கல்வி கற்க விரும்பும் மாணவர்கட்கு அவர்களது வீடுகளுக்கு சென்றும் கற்பிக்கப்படும். முழுவிபரங்களுடன் 10-9-82க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4403 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம்.

4403

## தேவை

அனுபவம் வாய்ந்த அச்சுக் கோப்பாளர், பைண்டர் தேவை. நேரில் வரவும். சித்திரா அச்சகம். 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

4405

## தவறிவிட்டது

சாரதி பத்திரம், காசோலை பத்திரம், இருநாட்குறிப்பு புத்தகம் பையுடன் 31-8-82ல் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தகவல் தரவும். சு. சங்கரப்பிள்ளை, பிள்ளையார் கோவிலடி, களபூமி, காரைநகர்.

4404

## அறிவித்தல்

### மின் விநியோகம்

1982ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமையும், 4ந் திகதி சனிக்கிழமையும், 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு கிளிநொச்சி - யாழ்ப்பாணம் மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் யாழ்ப்பாண பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மின்பொறியிலாளர்,
(யாழ். பிரதேசம்)
இலங்கை மின்சார சபை,
4331 சுன்னாகம்.

## பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம் கேள்விப் பத்திர விளம்பரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ கூ சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கொள்வனவு செய்பவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. திருப்பிச் செலுத்தப்படும் கட்டுப்பணம் ரூபா 250/-, திருப்பிச் செலுத்தப்படாத கட்டுப்பணம் ரூபா 10/- ஆகியவற்றை சங்கத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு அதனைச் சமர்ப்பித்து கேள்விப்பத்திர விண்ணப்பத்தை பெற்று பின்வரும் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். கேள்விப்பத்திரங்கள் 11-9-82 மு. ப. 9-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 11-9-82 மு. ப. 10-30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் 17-9-82க்கு முன் பணத்தை செலுத்தி வெற்றுச் சாக்குகளை அப்புறப்படுத்த வேண்டும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கம்.

1-9-82
பண்டத்தரிப்பு.
4407

மெச்சிக்சோவில்

# தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்படும்

## ஜனாதிபதி அறிவிப்பு

லண்டன் செப். 2

மெக்ஸிக்கோவிலுள்ள, உள்ளூர் தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்படவிருப்பதாக மெக்ஸிக்கோ ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இந்த நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அவர் கூறினார்.

வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை இருப்பதால், தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்படுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் தனியார் வங்கி அதிகாரிகள் பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வெளிநாட்டு வங்கிகளுக்குப் பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க)

# மாத்தளையில் தேசிய விளையாட்டுப் போட்டி!

வவுனியா)

அசில இலங்கை விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப்போட்டி இவ்வருடம் மாத்தளை அலிவிகார விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 10ம், 11ம். 12ம் திகதிகளில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொள்ளவிருக்கிறார்.

வவுனியாவில் இருந்து இப்போட்டிக்கு 16வீரர்கள் கலந்து கொள்கின்றார்கள் என வவுனியா விளையாட்டுப் பகுதி அதிகாரி ஏ, எஸ். குணரத்தினம் தெரிவித்தார்.

21 மாவட்டங்களிலிருந்து இப்போட்டிக்கு பல கிராமப்புற விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்வது இதுவே முதல் தடவை என திரு. குணரத்தினம் தெரிவித்தார்.

# வட்டுக்கோட்டைத் தொகுதி: ஒதுக்கப்பட்டுள்ள நிதி மீளாய்வு!

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி தொடர்பான மீளாய்வு எதிர்வரும் 6ம் திகதி திங்கட்கிழமை சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தற்போது வட்டுக்கோட்டைத் தொகுதி அலுவல்களை கவனித்துவரும் யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி மீளாய்வு பற்றிய கூட்டத்தில் பல்வேறு உள்ளூர் திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் பங்குபற்றுவார்கள். (க)

## பரீட்சைதிணைக்கள உதவி அத்தியட்சகர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிப் பழைய மாணவனும், நாவற்குளி மகாவித்தியாலய அதிபருமான திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை இலங்கைக் கல்விச்சேவை 5ம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்று கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திற்கு உதவி அத்தியட்சகராக நியமனம் பெற்றுள்ளார். (க)

## யாழ். எம். பி. கவனிப்பார்

(பண்டத்தரிப்பு)

மறைந்த வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. அமரர் திருநாவுக்கரசுவின் இடத்திற்கு புதிய எம். பி. ஒருவரை நியமிக்கும்வரை யாழ்ப்பாணத் தொகுதி எம். பி திரு. வி. யோகேஸ்வரன் வட்டுத்தொகுதி அலுவல்களை கவனித்து வருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க)

# புதிய கட்டிடத்தில் 10-வது ஆண்டு விழா

பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் நேற்றுமுன்தினம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவினைப் பலலட்சம் ரூபா பெறுமதியான அழகிய புதுக்கட்டிடத்தில் கொண்டாடியது. ஆரம்பத்தில் கள் உற்பத்தியிலும், விற்பனையிலும் மட்டும் ஈடுபாடு கொண்டிருந்த இச் சங்கம் படிப்படியாகமுன்னேறி இன்று பனஞ்சீனி உற்பத்தி, கள்போத்தலில் அடைத்தல் ஆகியவற்றுடன் வடிசாலைகள் அமைத்தல் வரையும் விரிவுபட்டு அபிவிருத்தி கண்டுள்ளது.

கடந்த வருடம் எமதுசங்கம் ரூபா 58,000 ஐ நிகரலாபமாகப் பெற்றுள்ளது. மேலும்கள் உற்பத்தியாளர்களுக்கு அவ்வக்காலங்களில் இலாபம் சம்பந்தமான போனஸ் பணம், விபத்துநிதி, வங்கியினூடாகக் கட்டாயசேமிப்பு என்பன செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு சீவல் தொழிலாளி இச்சங்கத்தில் மூவாயிரம் ரூபாவரை தனது மாதவருமானமாகப் பெறுகின்றார் என்பது பெருமைக்குரியதாகும்.

இச்சங்கத்தின் செயற்பாட்டுக்காக தொழிலாளர்கள், பணியாளர்களிடையே ஐக்கியத்தையும் பாச உணர்வுகளையும் தோற்றுவித்து சமூகரீதியிலான கல்வி, கலாச்சார, பண்பாட்டு முன்னேற்றத்துக்கு ஊக்கமளித்து சமூகஅந்தஸ்தை உயர்த்துவதே எனது குறிக்கோளாகும் மேலும்இந் நோக்கங்களைச் செல்படுத்துவதற்கு அனுசரணையாகஎமது சங்கப்பரப்பிற்குட்பட்ட சகல அமைப்புகளும் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளினதும் ஆதரவையும்கோரி வாழ்த்திப் பெருமைப்படுகின்றேன். (கி)

—கி. சிவப்பிரகாசம்
(தலைவர்)


நாகர்கோயில் நாகதம்பிரான் ஆலய

வருடாந்த

திருவிழாக்கள் பகிர்ந்தளித்தல்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த திருவிழாக்களில் ஆறு விழாக்களை நாகதம்பிரான் பக்தர்களுக்கு பகிர்ந்து அளிப்பதற்கு மேற்படி ஆலய பரிபாலன சபையினர் முன்வந்துள்ளனர். ஆகவே மேற்படி வருடாந்த விழாக்களில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் ஆலய பரிபாலன சபையின் செயலாளரிடம் விண்ணப்பப்படிவத்தினையும், உபயகாரர் விதிமுறையையும் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவ்வருட உற்சவங்கள் 27-9-82 திகதி ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தலைவர்
4406 ஆலய பரிபாலன சபை.



உ

திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருஷம் ஆவணித் திங்கள் 20-ம் நாள் (5—9—82) ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணி தொடக்கம் 11-30 மணி வரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எனது புத்திரன்
திருநிறை செல்வன்
பாலேந்திரன்
அவர்கட்கும்
(உரிமையாளர்:
பாலேந்திராஸ், நவீன
சந்தை, யாழ்ப்பாணம்.)

எமது புத்திரி
திருநிறை செல்வி
நகுலேஸ்வரி
அவர்கட்கும்

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் சமுகந்தந்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உங்கள் வரவு நல்வரவாகுக!

இங்ஙனம்

திருமதி க. அருளம்மாவும்
குடும்பத்தினரும்
174, கண்டி வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்.

த. குருசாமியும்
பாரியாரும்
161 A, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(4376)


# இன்றைய பலன்

ஆவணி மாதம் 18-ம் திகதி

வெள்ளிக்கிழமை

(3—9—82)

மேடம்: சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறு பிணிக்கும் இடமுண்டு, வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பதுடன் தெய்வ நம்பிக்கையும் நன்மையைத் தரும்.

இடபம்: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர்கள் கொண்டாட்டமும் கிடைக்கும்

மிதுனம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில் துறையில் நல்ல வெற்றியும் கிடைக்கும். சுபதினம்.

கடகம்: பணம் பலவழிகளிலும் செலவாகும். அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர். பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும்.

சிங்கம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள். இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்கு சிறந்த பலனை அளிக்கும். களஸ்திர வழியால் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு.

கன்னி: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாதிருப்பது நன்று. அவசர விரோதத்தின் மூலம் ஆபத்தைத் தேடிக் கொள்வீர்கள். துதி பாடிக் கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவார்கள்.

துலாம்: இன்று முன்னிலையில் நிற்பீர்கள், நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம், தெய்வ சிந்தை மேலோங்கும், குறிக்கோளில் வெற்றியும் கிடைக்கும்.

விருச்சிகம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகப் பெறுவீர்கள், சகதொழிலாளர்கள் மத்தியில் ஆதரவும் பெருகும்

தனுசு: நினைத்த காரியங்களில் வெற்றியுண்டு, எதிர்பாராதவகையில் ஆதரவுக்கும் இடமுண்டு. பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வார்கள், சிறப்பான தினம்.

மகரம்: மனதில் விரக்தி நிலை தென்படும், உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால் நடைகளினால் கஷ்டம் ஏற்படலாம், பூமிப்பிணக்குகளின்மூலம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம்.

கும்பம்: முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ளவும் நேரிடும்.

மீனம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும், இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் தனதானிய விருத்திக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பேசாலை ஸ்ரீ முருகன் உற்சவம்

[மன்னார்]

போசாலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 20 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்றது.

இறுதி நாள் உற்சவத்தின் போது பேசாலை பிரதான வீதி வழியாக சுவாமி வீதிவலம் நடைபெற்றது.

விசேட மேளக்கச்சேரி, அன்னதானம், கதிர் சுந்தரலிங்கத்தின் பக்திபாடல்கள் போன்ற விசேட நிகழ்ச்சிகளும் இத்தினத்தில் இடம்பெற்றன. [கி]

## மணிவாக்கு

உண்மையுள்ளவன் கிடையாது என்று எவன் கூறுகிறனே அவனே ஒரு மோசக்காரன் என்று திடமாக நம்பலாம்.

— ஜீயார்ஜ் பெர்கலி.

# நமது நோக்கு

## ஜனாதிபதி வடபகுதி விஜயம்?

''மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி, இரந்தழைப்பாராயாவருமங்கில்லை'' என்று ஔவையார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேசொல்லிவிட்டார்.

இன்று யாழ்ப்பாணத்தில் மாம்பழக் காலம் இல்லாத போதும் தேர்தல் மகோற்சவம் ஆரம்பமாய்விட்டது.

பிரதமராட்சி யென்றுலென்ன, ஜனாதிபதி ஆட்சியென்றுலென்ன ஆட்சித் தலைவர்கள் யாழ்ப்பாண மக்களின் ஆதரவைத் தேடுவது அவசியமென்பதை உணர்ந்து வந்திருக்கின்றனர். சிறப்பாக அமைச்சர்கள் 'கச்சை' கட்டுவது வழக்கம்.

இந்த உணர்வுக்குஇடர்ப்பாடு, நாடு சுதந்திரமடைந்த காலம் தொட்டே அதிகரித்து வருகிறது,

நாட்டின் முதற் பிரதமர் அமரர் 'டி எஸ்'' யாழ்ப்பாணம் வந்த போது இன்றிருக்கும் எதிர்ப்பு அன்றில்லாதபோதும், தமிழ் மக்களை ஒதுக்கும் திட்டங்கள்பற்றி அக்காலம் சந்தேகம் நிறைந்த காலமாயிருந்தது. ஐ. தே. கட்சியின் குத்துக் கரணம் அதற்குப் பின்னர் அம்பலமானது இப்பகுதி மக்கள் நன்கறிந்த விடயம்.

1956ல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க அரசாங்கம் ஐ. தே. கட்சி தமிழர்களுக்கு சார்பானதென்ற பிரசாரத்திலும் ஈடுபட்டிருந்தது. மீண்டும் ஆட்சிக்கு வந்த ஐ தே. கட்சி இந்தப் பிரசாரத்தை முறியடிக்க, தமிழர்களை எட்டத்தில் வைத்திருக்க வேண்டியிருந்தது, 'கண்கட்டி' வித்தை போல் நடந்த ஆட்சி அது.

எவ்வாறுயினும், தங்கள் போட்டிக்கு இவ்விரு கட்சிகளும் தமிழ் மக்களை பணயம் வைக்கும் வழக்கம் தொடர்ந்தது.

'தனிச் சிங்களச் சட்டம்' தமிழ் மக்களை ஒற்றுமைப் படுத்தியதற்கு நாம் அமரர் பண்டாரநாயக்காவுக்குக் கடமைப்பட்டுள்ளோம். 1958ல் நடைபெற்ற பயங்கர இனக்கலவரம் அதன் நேரடி விளைவே! அவரைத் தொடர்ந்து ஆட்சி புரிந்த அம்மையார் தமிழ் மக்களுக்கு எள்ளளவும் இடம் விடுவதில்லை யென்ற பிடிவாதங் கொண்டு ஆட்சி புரிந்தார்.

அமரர் டண்டாரநாயக்கா பிரதமராக யாழ்ப்பாண விஜயம் ஒன்றை மேற்கொள்ளமுடியவில்லை; தனிச் சிங்களத்துடன் யாழ்ப்பாணத்தில் 'சரிக்கட்டுவது' கடினமென உணர்ந்திருந்தார். பெரு வெள்ளப் பெருக்கு ஒன்று இங்கு ஏற்பட்டபோது உத்தியோக பூர்வமான ஒரு ஆகாய விமான ரகசிய விஜயத்தை மேற் கொண்டாரென்பது பலருக்குத் தெரியாது.

திருமதி பண்டாரநாயக்கா தேர்தல் பிரசாரத்துக்கு யாழ்ப்பாணம் வரும் வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழ் விழாவில் உயிரிழந்த ஆறு இளைஞர்களின் ஆன்மாவிற்கு 'பிராயச்சித்தம்' மறுத்த பிரதமருக்கு அந்த வாய்ப்பு எப்படிக் கிடைக்கும்?

யாழ்ப்பாணத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்க எடுத்த முயற்சி அம்மையாரின் வரவுக்கு வழிவகுத்தது யாழ்ப்பாணப் பொது மக்கள் தங்கள் பண்புக் கமைய அவ்விஜயத்தில் எவ்விதத்திலும் குதூகலிக்கவுமில்லை, குழப்பம் ஏற்படுத்தவுமில்லை. அம்மையாரின் ஆட்சியில் குறைகள் என்ன நிலவியிருந்தும், இனக்கலவரம் எதுவும் இடம்பெறவில்லை. ஒருவர் கொலையுண்டதோ சொத்து இழந்ததோ அக்காலத்தில் நடவாத சம்பவங்கள்.

இதனைப் பின்னணியாகக் கொண்ட திருமதி பண்டாரநாயக்கா தன் குடியுரிமையை இழந்த நிலையில் இங்கு வந்தபோது அவருக்கு அளித்த வரவேற்பும், மக்கள் காட்டிய அனுதாபமும் வேறெங்கும் காணப்படாதமுறையில் அமைந்ததெனலாம்.

திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சி பற்றிய குறைகள், கொடுங்கோலென்று நினைவுறுத்தும் பணி இன்று வரையும் நன்கு நடைபெறுகின்றது. அவ்வித ஆட்சிக்குத் திரும்பலாமா? என்ற அச்சமே இன்றைய ஆட்சியின் முக்கிய மேடைப் பிரசங்கம்.

யாழ்ப்பாண மக்கள் அவர் தோல்வியுற்று 'துகிலுரியப்பட்ட' நிலையில் இங்கு வந்தபோது தங்கள் பண்புக்குரிய வரவேற்பளித்தது,

''இன்னு செய்தாரை
ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்''

என்ற குறளுக்கு உதாரணமானது.

1977–ல் நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரவைத் தேடி வந்த அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன யாழ்ப்பாண முற்றவெளி பகிரங்க கூட்டத்தில் ஆரம்பித்த பேச்சு இன்னும் முடியவில்லை.

முடிவடைந்தவை; தமிழர்களுக்கெதிரான பல கொடிய கலவரங்கள், வன் கொலைகள், சித்திரவதை, கற்பழிப்பு, கொள்ளை, தீ வைத்தல் முதலிய அக்கிரமச் செயல்கள். இந்த ஆட்சியே யாழ்ப்பாணம் ராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட ஆட்சியை அளித்துவருகிறது.

இவற்றிற்கென்ன பரிகாரம்? தமிழ் மக்களுக்கென்ன பாதுகாப்பு? தமிழ் மக்களுக்கு என்ற ஒரு நிலப் பரப்பு, சுதந்திரம் எவ்வாறு கிடைக்கும்? நாமொரு சிறுபான்மையினமென்று ஒற்றை ஆட்சியில் சுதந்திரமாக வாழ்வது கனவாய்விட்டது, தனித்துவமாக வாழ்வது தவிர்க்க முடியாததாய் விட்டது.

எனவே தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு, அவற்றை அசையாத நம்பிக்கையுடன் போராடிப் பெற வேண்டுமென்று கொதிக்கும்இளைஞர் குழாத்துக்கு ஜனாதிபதி என்ன செய்தியைக் கொண்டு வருகிறார்?

அரசியல் தந்திரங்கள் அமரத்துவம் அடைந்துவிட்டன. அரசியல் ஞானம் என்றும் அழியாச் செல்வம், இது இன்றுவது தலை தூக்குமா?

# "யாழ். ராஜ்ய வீழ்ச்சிக்குக் காரணம் சாதிஅமைப்பே"

## சமூகமுன்னேற்றச் சங்கங்களின் ஆண்டு விழாவில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணராஜ்யம் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணம் அப்பொழுதுஇருந்தசாதிஅமைப்பு முறையால், தமிழ் சமுதாயம் பிளவுபட்டிருந்ததே. மாற்றார் வந்து நுழைவதற்குச் சாதிப் பிரச்சனைவழிவகுத்துவிட்டது. தமிழினம் விடுதலைபெற வேண்டுமானல் சாதிப்பிரச்னை முற்றுக ஒழிக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் சமூகமுன்னேற்றக்கழகங்களின் சமாஜ முதலாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் வலியுறுத்தினர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேற்படி கழகங்களின் சமாஜத்தலைவர் திரு. இ. மு. நாகலிங்கம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எல்லாத்தொழிலையும் எவரும் செய்யமுடியாத ஒருநிலை மனித சமுதாயத்தில்அமைந்துவிட்டது. இதனுல் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்தால் அத்தொழிலைக்கொண்டு சாதிசொல்லி புறக்கணிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிடுகிறது இந்தச்சமுதாயத்தினர் கல்வி. ஆற்றல், அறிவு ஆகியவற்றில் முன்னேறமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. சாதி அமைப்புமுறைபிறப்பின் பெயரால் முற்றுக ஒழிக்கப்படவேண்டும்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற இணைப்புக்குழுக்கூட்டத்தில் நான் பேசுகையில், சமூக ஏற்றத்தாழ்வு பாராட்டுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியதுடன், அதற்குச் சட்டம் போதியபலமில்லாதிருந்தால் அச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தைக்கேட்கும் படியும் குறிப்பிட்டேன். இது விஷயத்தில் யாழ். அரசாங்க அதிபர் அக்கறைகாட்டிவருவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் ஒருதாய்தனது பிள்ளையைப்பாடசாலையில் சேர்ப்பதற்குச் சாதியின் பெயரால் மறுக்கப்பட்ட சம்பவத்தைச் சொன்னபொழுதுதான் நான் கண்ணீர்வடித்தேன். இப்படி ஏனக்கு ஏற்பட்ட அனுபவம் எவருக்கும் வரக்கூடாது

இச்சமாசத்தின் கல்வி நிலையத்துக்கு ஜனாதிபதி நிதியிலிந்து விஷேச நன்கொடை பெற்றுத்தரவேண்டு மென்று கேட்கப்பட்டுள்ளது ஜனாதிபதி தேர்தல் அண்மையில் வருவதால் இடையில் ஜனாதிபதி நிதிக்குழு கூடுமோ தெரியாது. ஜனாதிபதிதேர்தல் முடிந்ததும் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

### அந்நியர்சூழ்ச்சியே காரணம்

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

வெளிநாடுகளிலிருந்து வந்து எங்களை ஆட்சிசெய்தவர்கள் செய்த சூழ்ச்சியினுல்தான் மக்கள் மத்தியில் அடக்கி ஒடுக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. தமிழினம் காலாதிகாலமாகப் பேதம்பாராட்டாது வாழ்ந்த இனம், சாதிபாராட்டுபவன் உண்மையான தமிழனல்ல.

தமிழினம் விடுதலைபெற வேண்டுமானுல், தீண்டாமை சாதிபேதம் பாராட்டுவது முற்றுக ஒழியவேண்டும்.

வேதமும் சுருதியும் தமிழ் மறை அல்ல; திருக்குறள்தான் தமிழ்மறை தமிழனுக்குள்ள மறைதிருக்குறள் தான்இதனைக் கருத்தில் கொண்டுதான்தமிழ் மறைக் கழகத்தை ஆரம்பித்தேன். கல்வி வளர்ச்சி ஏற்படுமானுல் ஒருசமூதாயம் தானுகவே வளர்ந்துவிடும்.

தமிழினத்தின் விடுதலைக்காகத் தலைவர்களும் அதனைச் சார்ந்த இயக்கங்களும் அரும்பாடுபட்டு வரும் இவ் வேளையில், அதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வேளையில் அடிப்படை மனித உரிமைகளை மீறும் சூழ்நிலை சந்தர்ப்பங்கள் இருந்து வருவது வேதனைக்குரிய விஷயமாகும் என்று உடுப்பிட்டி எம். பி பேசுகையில் கவலை தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

''சமூக விடுதலை என்பதுஒருவர் தர மற்றவர் வாங்குவதல்ல.

எம்மைச்சார்ந்த இயக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணி சமூகக் குறைபாடுகளை நீக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது அதனை மேலும் துரிதப்படுத்த இப்படியான சமூக இயக்க அமைப்புகளில் இளைஞர்கள் செயல்படவேண்டும்.

சாதி அமைப்புமுறையை எவராலும் ஒழித்துக்கட்ட முடியாது. ஆனுல் சாதியின் பேரால் இழைக்கப்படும்அநீதிகள்ஒழிக்கப்படவேண்டும்.

பொருளாதார – கல்வி – சமூகத்துறைகளில் போட்டி போட்டு நாங்கள் முன்னேற வேண்டும். இது கிராம – பிரதேச – மாவட்ட ரீதியில் பின் தங்கிய மக்கள் மட்டத்தில் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

''தமிழினத்தின் அரசியல் விடுதலைக்கு முன்னர், எமது சமூக விடுதலைக்கு, எமது தலைவர் திரு. அமிர்தலிங்கம் முயற்சிஎடுத்து வருகிறார்; நிச்சயம் வெற்றி கிடைக்கும்''

(ஆ)

# "படிப்படியாக தீண்டாமை ஒழிந்துவிடாது"

## - யாழ். அரச அதிபர்

[அரியாலை]

தமிழ் மக்களிடையே இருக்கும் தீண்டாமை படிப்படியாக ஒழிந்துபோகும் என்று சிலர்கூறிவருகிறுர்கள். இதனை நாம் ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தத் தீண்டாமையான கொடிய நோயை சமூகத்திலிருந்து நீக்கவேண்டியது எமது கடமையாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமூகமுன்னேற்ற மன்றங்களின் சமாசத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கலையரங்கில் திரு. எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற மாலை நிகழ்ச்சியில் அரசாங்கஅதிபர் தொடர்ந்து பேசியதாவது; ''சமூகத்தில் ஒரு பகுதியினரின் உரிமைகளை மறுத்து அவர்களைப் புறக்கணிக்கும் நாம் மற்றவர்கள் எமது உரிமைகளை மறுக்கிறுர்கள் என்றும் எம்மைப் புறக்கணிக்கிறுர்கள் என்றும் கூறுதல் என கருத்தாக இருக்கிறது. நாம் எம்மை நேசிப்பது போல மற்றவர்களையும் நேசித்துப் பழகவேண்டும்.

### ஒற்றுமை அவசியம்

யாழ்ப்பாண மாநகரமுதல்வர் திரு. இராசாவிசுவநாதன் பேசுகையில் கூறியதாவது: தமிழ்பேசும் இனம் இன்று விடுதலைப்பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது எமது விடுதலையைப் பெற நம்மிடையே இன்று ஒற்றுமை மிக அவசியமாகிறது.

தமிழ் மக்கள் இன்று இருள்மயமான சூழலில் வாழ்ந்து கொண்டு தமது உரிமைக்காகவும், விடுதலைக்காகவும், போராடிவருகிறுர்கள். நாம் இன்றும் எத்தனையோ கஷ்டங்களை அடையவேண்டியேற்படும். அந்த நிலைமை ஏற்பட்டாலும் நமது விடுதலையை நோக்கி அவைகளை எதிர்கொண்டுவாழவேண்டும். ஒருவர் இன்னெருவரை சாதியின்பேரால் தாழ்த்தும் அவல நிலைமை மக்களிடையே இருந்து முற்றுக ஒழியவேண்டும். எல்லாச் சமூகங்களும் சமனுகவும் சமத்துவமாகவும் வாழுகின்ற நிலைமை ஏற்படுகின்றபொழுதுதான் தமிழினம் தமது உரிமைப்போரில் வெற்றிபெறமுடியும், தமிழ் மக்களின் போராட்டங்களில் நாம் பார்வையாளர்களாக இராமல் பங்காளிகளாக மாறவேண்டும். அப்பொழுது தான் தாழ்ந்தநிலையில் இருக்கும் தமிழினம் தலைநிமிர்ந்து வாழமுடியும்.

### முற்றுக நீக்கவேண்டும்

யாழ். மத்தியகல்லூரி அதிபர் திரு. எஸ். இரத்தினசிங்கம் பேசுகையில் கூறியதாவது: பல சமூக இயக்கங்கள் தோன்றி மறைந்து போகின்றன. ஆனுல் இந்த நிலைமை இச் சமாசத்திற்கு ஏற்படாமல் இதனைத் தாய்மையாக வளர்க்கவேண்டியது இச்சங்கநிர்வாகிகளது கடமையாகும். தமிழ் மக்களிடையே இன்று இருக்கும் சாதிப் பிரச்னை அந்நியராட்சிக்காலத்தில் ஏற்பட்டதாகும். இதனை முற்றுக நீக்கவேண்டியது எமது பாரிய கடமையாகும்,

(5–ம் பக்கம் பார்க்க)

★ இந்திய – இலங்கை மீனவர் பிரச்னை:

# படகுகளை அடையாளம் காண கொடிகள் பறக்கவிடப்படும்!

## ஊடுருவலைத் தடுக்க வயர்லஸ் இணைப்பு!

### இருநாட்டு அதிகாரிகள் மாநாட்டில் சுமுகமுடிவு

சென்னை, செப். 2

இந்திய – இலங்கை மீனவர்கள் தொடர்பான பிரச்னைகள் பற்றி இரு நாட்டு அதிகாரிகளும், சந்தித்து 2 தினங்கள் நடத்தியபேச்சுவார்த்தையில், சுமுகமான முடிவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு வழிவகைகள்பற்றி இருநாட்டுப் பிரதிநிதிகளும், கருத்துக்கள் பரிமாறிக்கொண்டதைத் தொடர்ந்து சுமுகமான முடிவு ஏற்பட்டது.

படகுகளை அடையாளம் காண்பதற்கு, படகில் தங்கள் கொடிகளை பறக்கவிடுவதென முடிவு செய்யப்பட்டது.

படகுகள் ஊடுருவல்களைத் தடுப்பதற்கு இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்கும் இடையில் வயர்லஸ், ரெலிபிரிண்டர் வசதிகளை செய்வது என்றும் மாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது. [க]

அமெரிக்காவுக்கு

## எகிப்து ஜனாதிபதி டிசம்பரில் விஜயம்!

வாஷிங்டன், செப். 2

அமெரிக்க ஜனாதிபதி றீகனின் அழைப்பை ஏற்று டிசம்பரில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருப்பதாக எகிப்து ஜனாதிபதி முபாரக் தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதமர் எகிப்துக்கு விஜயம் செய்தால் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படும் என்று எகிப்து ஜனாதிபதி, நிருபர் கேட்ட கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இன்றுள்ள சூழ்நிலையில், எகிப்து ஜனாதிபதி இஸ்ரேலுக்கு விஜயம் செய்வது சாத்தியமில்லை என மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்து ஜனாதிபதி, இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் பட்சத்தில் ஜெரூசலத்திற்கும் செல்லவேண்டும் என்று இஸ்ரேல் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்க மறுத்ததைத்தொடர்ந்து ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த இஸ்ரேல் விஜயம் கைவிடப்பட்டது.

மத்திய கிழக்கு சமாதானத் திட்டம் பற்றி அமெரிக்க ஜனாதிபதியுடன் பேச விருப்பதாகவும் எகிப்திய ஜனாதிபதி தெரிவித்தார். [க]

லட்சக்கணக்கான நகைகள்

## ஆலயத்தில் கொள்ளை; இளம் இன்ஜினியர் கைது

சென்னை, செப். 2

திருநெல்வேலி ஆலயமொன்றில் பல லட்சக் கணக்கான நகைகள் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இளம் இன்ஜினியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இன்ஜினியர்நாகர் கோவிலைச் சேர்ந்தவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நாகர்கோவில், கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் நடந்த மற்றும் பல கொள்ளைச் சம்பவங்களில், இவருக்குத் தொடர்புண்டு என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலிஸார் இச்சம்பவங்கள் பற்றித் தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)


# வைத்திலிங்கம்ஸ்

★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

‘றிவர்’ பிரான்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும்
இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்

நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி: 33143-4

கிளை:
138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


தமிழ்நாடு

# புதிய ஆளுநராக குரானா நியமனம்!

சென்னை, செப். 2

தமிழ்நாடு புதிய ஆளுநராக திரு. எஸ். எல். குரானா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நாளை வெள்ளிக்கிழமை பதவி ஏற்பார்.

தமிழ்நாடு ஆளுநர் திரு. சாதிக் அலி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வுபெறும் திரு. சாதிக் அலிக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுவிருந்தொன்று அளித்தார்.

இந்த விருந்தில், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம், சபாநாயகர், திரு. ராசாராம், மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், தலைமை நீதிபதி திரு சிங் ஆகியோரும், உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டிலிருந்து கற்ற மனிதராக திரும்புவதாகவும், கடமை பயனுள்ளதாக அமைந்ததாகவும், ஓய்வு பெறும் ஆளுநர் திரு. சாதிக் அலி தெரிவித்தார். [க]

## கல்கத்தாவில் 94 பேர் கைது

புதுடில்லி, செப் 2

மேற்குவங்காள நிர்வாக சீர்கேட்டைஎதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் இந்திரா காங்கிரஸை சேர்ந்த 94 உறுப்பினர்கள் தாமாகவே வந்து கைதானார்கள். 8 மணிநேரம் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது (க)

பிரான்சின்

## சிக்கன பட்ஜெட்

லண்டன், செப். 2

பிரான்ஸ் சிக்கன வரவு செலவுதிட்டமொன்றை தயாரிக்கவிருக்கிறது.

பொருளாதார கட்டுப்பாட்டிற்கு இது அவசியம் என்றும் கடந்த ஜூன் மாதத்தில் பிரான்ஸ் நாணயமதிப்பு குறைக்கப்பட்டதென்றும், சம்பள உயர்வு, விலைவாசி அதிகரிப்பு இடைநிறுத்தி வைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. [க]

ம. கிழக்கில்

## புதிய சமாதான முயற்சி!

லண்டன், செப், 2

மத்திய கிழக்கில் புதிய சமாதான முயற்சியொன்றை ஆரம்பிக்கப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒரிஸா, பிஹார், உத்திரப்பிரதேசம்:

# வெள்ளத்திற்கு 60 பேர் பலி; 55 லட்சம் மக்கள் பாதிப்பு!

புதுடில்லி, செப் 2

ஒரிஸா, பிஹார், உத்தரப் பிரதேச மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 55 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ள அகதிகளுக்கு 22 தொன் சமைத்த உணவு பார்சல்கள், 5 ஹெலிக்கொப்டர்கள் மூலம் நேற்று விநியோகிக்கப்பட்டது.

48 மீன் படகுகள், அகதிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

வெள்ள நிலைமையில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் உத்தர பிரதேஷில் 2 தினங்கள் தொடர்ந்து பெய்துவரும் மழையினால், வெள்ள நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

காமிப்பூர், அலிகாபூர் ஆகிய பகுதிகளில், சிவில் அதிகாரிகளுடன் இராணுவத்தினர், வெள்ள நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

இருகட்சி

## உறுப்பினர் மோதல்: 29பேர் காயம்

சென்னை, செப். 2

மன்னார்குடி கிராமத்தில் இரு கட்சியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 29 பேர் காயமடைந்தனர். படுகாயம் அடைந்த 8 பேர், அவசர சிகிச்சைக்காக மன்னார்குடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பலத்த காயமடைந்தவர்கள் அ. தி. மு. க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகும். (க)

தேசிய பிரச்னைகள்;

## அரசியலுக்கு அப்பால் கவனிக்கப்படவேண்டும்

புதுடில்லி, செப். 2

பொறுப்போடு கூடின பத்திரிகைச் சுதந்திரத்தில் தான் நம்பிக்கை வைத்துள்ளதாக பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்தில் நடந்த இந்திரா காங்கிரஸ் கூட்டத்தில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பீகார் பத்திரிகை மசோதாவில் மோசமானது எதுவும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் பொறுப்போடுநடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேசியப் பிரச்னைகள் கட்சி அரசியலுக்கு அப்பால் கவனிக்கப்படவேண்டும் என்றார்.

உத்தரப் பிரதேஸில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கட்சி உறுப்பினர்கள் உதவ வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (க)

இலவச உணவு

## இரண்டரைலட்சம் தொன் அரிசி தேவை

சென்னை, செப். 2

தமிழ்நாடு அரசின் இலவச சத்துணவு திட்டத்திற்கு வருடம் இரண்டரை லட்சம் தொன் அரிசி தேவைப்படுவதாக நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

உணவு உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்பட்டால் மத்திய அரசின் உதவி பெறப்படும் என்றும் அவர் தெரிவித்தார் (க.

பாலஸ்தீனருக்கு நிரந்தர தீர்வு:

# ஜனாதிபதி றீகன் இஸ்ரேல் அரசுக்கு கடிதம்!

லண்டன், செப் 2

பாலஸ்தீனர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண்பது தொடர்பான விபரங்கள் அடங்கிய கடிதமொன்றை அமெரிக்க ஜனாதிபதி றீகன், இஸ்ரேல் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இஸ்ரேல் மந்திரிசபை இக்கடிதம்பற்றி ஆராயவிருக்கிறது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லெபனான் பிரதமரைச் சந்தித்தபின் நாடு திரும்பினார்.

பாலஸ்தீனர்களின் பிரச்னை 3 கட்டமாக அமைந்துள்ளதாகவும், முதலாவது கட்டம் பாலஸ்தீனர்களின் வெளியேற்றமென்றும், 2-வது கட்டம் லெபனானிலிருந்து அந்நியர் வெளியேறவேண்டுமென்றும் மூன்றாவது கட்டம், பாலஸ்தீனர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வுகாண்பதென்றும் அமெரிக்க பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார்.

இதேசமயம், பாலஸ்தீனர்களுக்கு சுதந்திர நாடு அமைக்கப்படும் என பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் திரு. அரபாத் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (க)

# புதிதாக 20 நீதவான்கள்; 3 மேல்நீதிமன்ற நீதிபதிகள்

## நியமனங்களுக்கு திறைசேரி அங்கீகாரம்

[யாழ்ப்பாணம்]

புதிதாக 20 நீதவான்களும், 3மேல் நீதிமன்ற நீதிபதிகளும் நியமிக்கப்பட விருக்கிறார்கள்.

இந்த நியமனங்களுக்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளது. நீதிபரிபாலன ஆணைக்குழுவும் திறைசேரியும். இதற்கான முடிவை எடுத்துள்ளன

நீண்டகாலமாக வழக்கு விசாரணைகள் தாமதமாகி வருவதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

புதிய நீதிபதிகள் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவார்கள்.

## அசாம் பிரச்னை

## இருதரப்பினரும் இணக்கம்

புதுடில்லி, செப். 2

அசாமிலுள்ள வெளியார் பிரச்னைபற்றி அரசு, எதிர்க்கட்சி பிரதிநிதிகள் கொண்ட மாநாடு புதுடில்லியில் நடைபெற்றது. இருதரப்பினருக்குமிடையில் நல்ல இணக்கம் காணப்பட்டதாகவும், நாளை வரை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன், தெரிவித்தார்.

## சனி, ஞாயிறு மின்துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரதான மின்சார லையினில் அத்தியாவசிய திருத்த வேலைகள் நடைபெறுவதால் நேற்று மின்துண்டித்தல் நடைபெற்றதுபோல இம்மாதம் 4-ம் திகதியும், 5-ம் திகதியும் காலை 7 மணிமுதல் மாலை 5 மணிவரையும், மின்சாரம் தடைப்படுமென்று யாழ். பிரதேச மின் அதிகாரி தெரிவித்துள்ளார். அத்தியாவசிய சேவைக்காக யாழ். அரசினர் வைத்தியசாலை, வானொலிநிலையம், கச்சேரி போன்ற சில இடங்களுக்கு மட்டும் சுண்ணாகம் மின்சார நிலையத்தில் இயந்திரம் இயக்கி மின்சாரம் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## இன்று மஹா கும்பாபிஷேகம்

[கொக்குவில்]

கொக்குவில், நந்தாவில் கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

இன்று காலை ஐந்தரை மணியளவில் ஸ்தூபி கும்பாபிஷேகமும், அதனைத் தொடர்ந்து மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும். மண்டலாபிஷேகம் தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும். அம்பாள் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ நா. முத்துக்குமாரசாமிக் குருக்கள் தலைமையில் பிரம்மஸ்ரீ கு. இராமநாதக் குருக்கள் கிரியைகளை நடத்துவார்.

## ஐ. நாணய சங்கங்கள்

(சுழிபுரம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் புதிதாக ஆறு கூட்டுறவு ஐக்கிய நாணய சங்கங்களை உருவாக்குவதில் வடபகுதி கூட்டுறவு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஐக்கிய நாணயச் சங்கங்கள் யாவும் மட்டுப்படுத்தப்பட்ட சங்கங்களாக அமையவுள்ளன. மிகக்குறைந்த தொகையினரான நாற்பது பேருக்குமேற்படாத வகையில் அங்கத்தவர்கள் கொண்டதாகப் புதிய சங்கங்களுக்கு அரசாங்கம் பல சலுகைகளை வழங்கவுள்ளதுடன் பல கடன் வசதிகளையும் அங்கத்தவர்களுக்கு வழங்கவுள்ளது-

## பயிற்சிக் கருத்தரங்கு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட சகலகிராமோ யசபை உறுப்பினருக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. மேலதிக அரசாங்க அதிபர் திரு பற்றிக்கருத்துரை வழங்குவார்.

## இன்றைய இசை நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்: ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி இசைப்பகுதி நடத்தும் 3வது ஆண்டு பத்துநாள் இசைவிழாவின் 8-வது தினமாகிய இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

மாலை 6 — 6-15 மணி செல்விகள் எஸ். விஜயராணி, எஸ். எழினி, எஸ். கலைச்செல்வி பாடுவார்கள்.

மாலை 6-15 — 6-45 மணி செல்விகள் கெ. அபிராமி, யே. பாமதி பாட்டு, செல்வன்கள் எம். தேவராஜ் வயலின், ரி. ராஜன் மிருதங்கம்.

மாலை 6-30 — 7-15 மணி செல்வி வாசுகி இராஜலிங்கம் பாட்டு, செல்வன் பி. கண்ணன் மிருதங்கம், பிரம்மஸ்ரீ என். சோமாஸ்கந்தசர்மா மிருதங்கம்.

இரவு 7-15 — 8 மணி திரு. ரி. நித்தியானந்தன் வீணை, பிரம்மஸ்ரீ என். சோமாஸ்கந்தசர்மா மிருதங்கம்.

இரவு 8—9 மணி கெஞ்சிற் கச்சேரி திரு. என். கே. பத்மநாதன் நாதஸ்வரம், திரு. ஆர். இராதாகிருஷ்ணன் வயலின், திரு. கே. கணேசபிள்ளை தவில் திரு. எம். சிதம்பரநாதன் மிருதங்கம், திரு. எஸ். இராசாமுகர்சிங் வாசிப்பார்கள்.

× × ×

யாழ். ரசிகரஞ்சன சபாவின் 31வது ஆண்டு விழாவின் 12வது தினமான இன்று வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள்.

மாலை 6 மணி செல்வி ஜசோதா செல்வராசா பாட்டு திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலின், மீனுகுமாரி இராமநாதன் மிருதங்கம்.

இரவு 7 மணி திருமதி கமலநாயகி சூரியகுமார் பாட்டு, திரு. கெ. சித்திவிநாயகம் வயலின், பி. சின்னராசா மிருதங்கம்.

இரவு 8 மணி: திரு. பரம் தில்லைராசா பாட்டு, திரு. எஸ். சர்வேஸ்வரசர்மா வயலின், திரு. எ. எஸ். இராமநாதன் மிருதங்கம், திரு. ஆர். யோகராசா கடம். (உ)

## பாதிக்கப்பட்டவர்களை "அமிர்" சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

வேலைநிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை, எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் திங்கட்கிழமை காலை தனது பணிமனையில் சந்திக்கவுள்ளார். இச்சந்திப்பின் போது, ஜனாதிபதியுடன்பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாய்ப்பாக, பாதிக்கப்பட்ட வேலைநிறுத்த ஊழியர்களின் முழுவிபரங்களும் சேகரிக்கப்படும் என்று அறியப்படுகிறது. இதுவிடயமாக தமிழ் தொழிற் சங்க கூட்டணியும், நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (கெ)

## பெரியகுளம் தேர்தல்: அ. தி. மு. க. வாபஸ் பெறாது

சென்னை, செப். 2

பெரிய குளம் லோக்சபா தேர்தலில் அ. தி. மு. க. போட்டியிடுவதால் மத்திய மாநில அரசு உறவுகள் எந்த விதத்திலும் பாதிக்காதுஎன்று தமிழ்நாடு நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

கட்சி அரசியலும், மத்திய மாநில உறவும், மாறுபட்டதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெரியகுளம் தொகுதியில் அ. தி. மு. க. போட்டியிடுவது இறுதியானமுடிவு என்றும் வாபஸ்பெறும் எண்ணம் இல்லை என்றும் அ. தி. மு. க, பொதுச் செயலாளர் திரு பா. உ. சண்முகம் தெரிவித்தார். (க)

## படிப்படியாக

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இத் தீண்டாமைப் பிரச்னை படிப்படியாக போக்கக்கூடியதல்ல. இதனை முற்ருக அகற்ற எப்மத்தியில் மனமாற்றம் அவசியமாகிறது. அடுத்தது சீதனப் பிரச்னை. இதுவும் சமூகத்தை சீரழிக்கிறது. சீதனம் கேட்க மாட்டோம் என்ற எண்ணம் வாலிபரிடையேயும், சீதனம் கேட்போரைத் திருமணம் செய்யமாட்டோம் என்ற எண்ணம் யுவதிகளிடையே உண்டாகவேண்டும். இதன் மூலமே இதற்குத் தீர்வு காணமுடியும்.

கல்விஅதிகாரி திரு. வெ. சபாநாயகம் பேசுகையில் கூறியதாவது: கல்வி மனிதனை மேம்படுத்துகிறது. வளம் படுத்துகிறது உண்மையை நிலைப்படுத்துகிறது. இவ்வியக்கங்கள் சமூகத்திடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் கல்வி, பொருளாதாரவிடயங்களிலும் முன்னின்று உழைக்கவேண்டும். இதன்மூலம் சமூகப்பற்றையும் தேசப்பற்றையும் உண்டாக்க வேண்டும். உலகிலே தேச பக்தியுள்ள மக்கள் வாழும் நாடு யப்பான் தேசமாகும். ஆனால் அந்த நாடு உலகில் இன்று கைத்தொழில் நாடாக விளங்குகிறது அந்த நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க வேலை நிறுத்தங்களைச் செய்வதில்லை. கையில் கறுப்புப் பட்டியொன்றைக் கட்டி தமது எதிர்ப்பைக்காட்டிக்கொள்வார்கள். இப்படியான தேசபக்தி எமக்கும் ஏற்பட்டால் நமது நாடும் நமது இனமும் வளர்ச்சியடையும்.

திரு. வீ. ரவீந்திரராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். செல்வன் கே. கணேஷ் நன்றி கூறினார். (க)

## நாய்க்குச்சுட்டது இளம் பெண்ணில் பட்டது!

(மன்னார்)

மன்னார் பட்டினத்தில் விசர் நாயைக் கொல்வதற்காக துப்பாக்கியால் சுட்ட போது துப்பாக்கிச் சன்னம் சிதறி இளம் பெண் ஒருவரின் கையில் பாய்ந்ததால் அவர் காயமடைந்தார். இவர் மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ)


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
உல்லாசப்பறவைகள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு - சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

119 வது வெற்றித் திருநாளாக
மனோகரா (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
கார்த்திக் - ராதா - தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

றீகல் [யாழ். நகர்] Daily 5 Shows
JIM BROWN
JIM KELLY IN
THREE THE HARDWAY

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
BILLION
DOLLAR
THREAT
(Action packed)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
சிவாஜி- மஞ்சுளா
எங்கள்தங்கராஜா

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

3-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
ஐந்து இளைஞர்களும், ஐவகை ஆயினும் ஆருயிர் நண்பர்கள் ஒவ்வொருவருடைய தனி வாழ்க்கையும் ஒருவகைப் பாலைவனம். இவர்களின் வாழ்வில் அழகும் இளமையும் எளிமையும், தூய்மையும் பரந்தநோக்குமுடைய பெண்ணொருத்தி வருகிறாள். ஐவருக்கும் அவளில் ஒரு கண். அவளோ ஐவரிலும் ஒரு வகையான அன்பையே வைத்திருந்தாள். முடிவை அறியவெண் திரை விடையளிக்கும்.
பாலைவனச்சோலை
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்

இலங்கை - இந்திய கூட்டுத் தயாரிப்பில் உருவாகி ஒரே முறையில் இலங்கையிலும் இந்தியாவிலும் திரையிடப்படும் குடும்பக் காவியம். இளம் சிட்டுக்கள் பிரதாப் ராதிகா சேர்ந்து நடிக்கும் வண்ணக் காதல் காவியம். இலங்கையின் எழில் காட்சிகள் படத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு.
பிரதாப்-ராதிகா விஸ்வநாத்
டெல்லி கணேஷ் மற்றும் பலர்
நடிக்கும்
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

# இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு தாயகம் அமையும் அறிகுறிகள் தென்படுகின்றன!

## கூட்டணி தலைமையக அடிக்கல்நாட்டு விழாவில் 'அமிர்'

(யாழ்ப்பாணம்)

''இந்நாட்டில் தமிழருக்கென ஒருதாயகம் அமையப் போவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன.''

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரி வீதி கொட்டடியில் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் இக்கட்டிடம் அமைக்கப்படவுளளது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் அங்கு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது,

'ஆட்சியாளர் கடந்த மாவட்ட சபைத் தேர்தலின் போது செய்த அனர்த்தங்களை ஒரு சவாலாக ஏற்று இக்காரியாலயத்தை விரைவில் கூட்டி முடிக்கவேண்டும்.

''ஜனாதிபதியுடன் நாம் நடாத்திய உயர்மட்டப் பேச்சுவார்த்தையின்போது வலியுறுத்தியதன் பிரகாரம் யாழ். பொதுசன நூலகம், ஈழநாடு பத்திரிகை காரியாலயம், திரு. வெ. யோகேஸ்வரன், மற்றும் வன்செயல்களினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு கிடைத்தது.''

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி, திரு. மு. ஆலாலசுந்தரம், பேராசிரியர்கு. நேசையா ஆகியோரும் இவ்வைபவத்தில் உரைநிகழ்த்தினர்கள்.

இக்காரியாலயத்தை அமைப்பதற்கு பொதுமக்களிடமிருந்து நிதி சேகரிப்பதற்கென ஒருகுழுவும் தெரிவுசெய்யப் பட்டது. மா)

## துப்பாக்கி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியாகச் சென்றதாகவும், மேற்குறிப்பிட்ட இடத்தில் பாதையைத்தடைசெய்து முள் முருக்கக் குற்றிகளும், கற்களும் போடப்பட்டிருந்ததைக் கண்டு காரில் சென்ற ஆண்கள் மூவரும் இறங்கி தடைகளை அகற்ற முற்பட்டபோது திடீரென தலையில் துப்பாக்கிச்சூடு பட்டு சிவசம்பு என்பவர் நூறு யார் தூரம் ஓடி மயக்கமடைந்து வீழ்ந்ததாகவும் மற்றைய இரு ஆண்களும் யாழ்ப்பாணம் நோக்கி ஓடியதாகவும், கார்ச்சாரதி பீதி அடைந்து காரை எடுத்துக் கொண்டு தப்பி ஓடிச் சென்றதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கார்ச்சாரதியிலரின் உதவியுடன் திரும்பவும் ஸ்தலுக்கு வந்து துப்பாக்கிச்சூட்டுக் காயத்தினல் மயக்கமடைந்திருந்தவரை யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து அனுமதித்ததாகவும் அவர் பின்னர் இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக் ப்பட்டுள்ளது.

யாழ் நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜோகநாதன் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் யாழ். ஆஸ்பத்திரிக்குச்சென்று இறந்தவரின் சடலத்தையும் பார்வையிட்டு மரண விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு முன்பாக உள்ள வீட்டின் ஜன்னல்களிலும் துப்பாக்கி ரவைகள் துளைத்திருக்காணப்பட்டன.

மரணவிசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார். இறந்தவரின் சடலம் இன்று பிரேத பரிசோதனை செய்யப்படவுள்ளது.

இனம்தெரியாத ஒரு கோஷ்டியினரே துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிகிறது. இச்சம்பவத்துக்கு இலக்கானவர்கள், தங்களுக்கு எதிரிகள் இல்லை என்று தெரிவித்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது சுன்னாகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதுவரை எவரும் இதுசம்பந்தமாகக் கைதுசெய்யப்படவில்லை. (மா)


* மத்தியகிழக்கு, லண்டன்

செல்வோருக்கு

மிகவும் குறைந்த கட்டணத்தில்

GULF AIR டிக்கட்டுகள்

யாழ்ப்பாணத்தில் உடனடியாக

மக்கினென்ஸ் வழங்குகிறது

எந்த நாட்டிற்கும்

எந்த விமானத்திலும்

மிகக்குறைந்த கட்டணத்தில்

விமான டிக்கட்டுகள்

ஃ (TRAVELLERS CHEQUES)

பிரயாணக் காசோலைகள்

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான

எம்மிடம்

வங்கியில் அறவிடும் அதே

கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மக்கினென்ஸ்

ட்றவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

த. பெ. எண் 92, தொலைபேசி: 8154


## இந்தியா முழுவ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சுதந்திரத்தை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் முதலாவது நடவடிக்கை இதுவாகுமென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சட்டத்தின் மூலம் ஆட்சேபனைக்குரிய செய்திகளை எழுதும் பத்திரிகையாளரை சிறையிலிட முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சட்டம் முதலில் பீஹார் மாநிலத்தில் அமுல்செய்யப் பட்டாலும் பின்னர் ஏனைய மாநிலங்களுக்கும் விஸ்தரிக்கப் படலாமென்றும் பத்திரிகையாளர்கள் கண்டித்துள்ளனர்.

பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இச்சட்டத்திற்கு ஆதரவாக நேற்று உரையாற்றியதையடுத்தே 24 மணிநேர வேலை நிறுத்தத்திலீடுபடுவதென்று பத்திரிகையாளர்கள் தீர்மானித்தனர். [வெ]

## முறியடிப்பு

சென்னை, செப், 2

மாகாலி பட்டியிலும் மற்றும் 6 கிராமங்களிலும் சுமார் 1 லட்சத்து 61 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை மதுரை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்கள்.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டதுடன், எரு ஆட்டோரிக்ஷோவும் கைப்பற்றப்பட்டது.

இக்கடத்தல் பொருட்களில் வெளிநாட்டு ஜவுளிகளும், றேடியோக்களும், கஸட்டுகளும் இருந்தன.

சடலூரில் உள்ள சில குடிசைகளைத் திடீர் சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை கைப்பற்றினர்கள் இச்சம்பவம் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க)

## சாரணர்சங்க ஆணையாளரின் யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை சாரணர் சங்கத்தின் உதவிப் பிரதம ஆணையாளர் திரு. ஜே லயனல் சில்வா யாழ். மாவட்ட சாரணர் கிளைச்சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் உரையாற்றினர்.

நிர்வாகக் குழுத் தலைவர் திரு. ஜே. எஸ். எஸ். ஆனந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், யாழ். மாவட்டத்தில் சாரணிய நிகழ்ச்சிகள் சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடைபெற்று வருகின்றன எனவும், குறிப்பாக பூநகரியில் நடைபெற்ற மகாதேவா தாம்போதி சிரமதானப்பணி யாழ். மாவட்ட சாரணர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டமையைப் பாராட்டிப்பேசினர்.

கடந்தமே மாதம் நடைபெற்ற சாரணர்களின் கைப்பணிப் பொருட்காட்சியையும், நல்லூர்க்கந்தசுவாமி கோவிலில் சாரணர்கள் ஆற்றிய சேவை பற்றியும் பாராட்டினர்.

யாழ். மாவட்ட சாரண ஆணையாளர்திரு. எஸ். காந்தமூர்த்தி தனது வரவேற்புரையுடன் யாழ். மாவட்டத்தில் தரமான சாரணர்களை உருவாக்கி வந்தமையும் தொடர்ந்தும் அதே பணியில் ஈடுபட்டு தலைமைக் காரியாலயத்திற்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் தெரிவித்தார்.

உதவிமாவட்ட சாரண ஆணையாளர் திரு. க. சச்சிதானந்தமும் உரையாற்றினர்.

இவ்வைபவத்தில், உதவி மாவட்ட ஆணையாளர்கள், வெளிக்கள ஆணையாளர், கிளைச்சங்க உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர்கள், [மா-வெ]

## இந்திய அமைச்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

திரு. ஸ்டீபன் கப்பல் போக்குவரத்து அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். திரு. திவாரி எரிபொருள், நிலக்கரி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. வசந்பட்டேல் ரசாயனத்துறை அமைச்சராகவும், திரு. வீரேந்திரபட்டேல் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

புதிதாக 5 ஸ்டேட் அமைச்சர்களும், 3 துணை அமைச்சர்களும் நியமிக்கப்பெற்றுள்ளனர். புதிய நியமனங்கள்மூலம் மத்திய அமைச்சரவையின் எண்ணிக்கை 61ஆக உயர்ந்துள்ளது. [வெ]

## பாதுகாப்பு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமாக யாழ். செயலகத்திலும், பொலிஸ், இராணுவ நிலையங்களிலும் அடிக்கடி மகாநாடுகள் கூட்டப்பட்டுவருகின்றன.

நேற்று குருநகர் இராணுவ முகாமில், பிரிகேடியர் ரணதுங்க. பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். பி. ராஜகுரு யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன் நேசையா ஆகியோர்கூடி தேர்தல்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் நடத்தினர்.

யாழ் தேர்தல் அலுவலகத்தில் இரவு பகலாக தேர்தல் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. [மா]

## கூட்டுறவாளர் தினவிழா நாளை

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கூட்டுறவாளர் தினவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் ப. நோ. கூ. ச. தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு ஆலாலசுந்தரம், மகளிர் சங்க பாவனையாளர் கல்வித்திட்டப் பணிப்பாளர் செல்வி ஜெயந்தா தென்னக்கோன் உட்பட பலர் உரையாற்றுவர்.

தினவிழா நடைபெறுவதையிட்டு அலங்கார ஊர்திகள், ஊர்வலம், வாசன ஊர்வலம், விளையாட்டு போட்டிகளும். இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. [மா]

## நன்றி நவிலல்

### பொன்னம்பலம் செல்வநாயகம்

காலஞ்சென்ற யாழ் பல்கலைக்கழகத்தின் நூலகப் பாரிய சிரேஷ்ட உதவிப்பதிவாளர் திரு. பொன்னம்பலம் செல்வநாயகம் அவர்களின் மரணச்சடங்குகளின்போது சமுகமளித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர்வளையங்கள், துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியும், இறுதி யாத்திரையில் கலந்தும் இன்னும் பல்வேறு வகையில் உதவியளித்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி புஸ்பராணி செல்வநாயகமும்
குடும்பத்தினரும்

958/26, தலையாளி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 4413

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 66-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் செப். 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Elanadu — P. O. Box 49 Tlegrams 'Eelanadu' T'phone 389 and 8126.